1993 ஏப்ரல் 19]

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் ரயில்வே சந்திப்பு அருகில் எலக்ட்ரானிக் தொழிற் பேட்டை அமைக்க அரசாங்கம் நிலம் கொடுத்திருக்கிறது. ஆனால் அங்கே இன்னும் தொழிற் பேட்டை ஆரம்பிக்கவில்லை. இதை உடனே ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் பேட்டை 51 பிளாட்டுகள் கொண்டதாக பிரிக்கப்பட்டு 40 பிளாட்டுகள் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதி 11 பிளாட்டுகள் தொழில் முனைவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் எலக்ட்ரானிக் தொழிற் பேட்டை அமைப்பதற்கு அந்த தொழில் முனைவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவையோ அவைகளை அளித்து அந்த எலெக்ட்ரானிக் தொழிற் பேட்டை உடனே செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவர் அனைவருக்கும் தொழிற் பேட்டையில் தொழில் கூடங்கள் ஒதுக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அரசு செய்து வருகிறது. மீதியுள்ள 11 தொழில் முனைவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அரசு செய்து கொடுக்கும்.

395—

## சி. கோபாலபுரம்—புரவிபாளையம் இணைப்புச் சாலையை தார்ச்சாலையாக மாற்றல்.

* 11103—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், சி. கோபாலபுரத்திலிருந்து கருமாண்ட கவுண்டனூர் வழியாக புரவிபாளையம் இணைப்புச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், சி. கோபாலபுரத்திலிருந்து கருமாண்டகவுண்டனூர் வழியாக புரவிபாளையம் இணைப்பு சாலையை தார்ச்சாலையாக்கவும் அதன் குறுக்கே உள்ள ஓடை மீது பாலம் கட்டவும் ரூபாய் 19 இலட்சம் செலவாகும். தற்போது போதிய நிதி ஆதாரம் இன்மையால் இப்பணியை எடுத்துச் செய்ய செயற்குறிப்பேதுமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பதினாறாம் பட்டியல்).

1—

கோவையில் அருங்காட்சியகம்.

வினா எண் 6052—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அரசு நிரந்தர அருங்காட்சியகம்—பொருட்காட்சியை நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

மத்திய அரசு மானியத்தில் ஆண், பெண் பயிற்சி முகாம் ஸ்பான்ஸர் முறையில் நடத்தப்படுவதை மாற்றி மீண்டும் பழைய முறையிலே நடத்துவது.

வினா எண் 7980— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசு மானியத்தில் மாநில அளவிலான ஆண், பெண் பயிற்சி முகாம் தற்போது ஸ்பான்ஸர் முறையில் நடத்தப்படுவதை மாற்றி மீண்டும் பழைய முறையில் நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS